# சங்க முழக்கம்

ஆசிரியர் : சி.கே.எம்.



## தோழர் ஜோதிபாசுவின் புகழ் நீடித்திருக்கும்

"காலம் வேகமாகத்தான் போகிறது. நேரடியான அரசியலில் நான் இறங்கி 50 ஆண்டுகள் முடிந்துவிட்டன. முதலில் நான் அரசியல் களத்தில் அடியெடுத்து வைக்கும்போது நாட்டின் விடுதலைக் கான போராட்டம் மிக முக்கியமானதொரு கட்டத்தை அடைந்திருந்தது. அந்த நேரத்தில் எங்களது இலக்கு என்பது எப்படி விடுதலை பெறப்போகிறோம் என்பது மட்டுமின்றி, அதன் பிறகு தேசத்தை எப்படி உருவாக்க வேண்டும் என்பதாகவும் இருந்தது. ஆனால் நமது இறுதியான இலக்கு என்பது ஏழைகளின் விடு தலையை உறுதிப்படுத்துவதுதான். உலகம் முழு வதிலும் இருந்து தொழிலாளர் படையின் விடுதலைக் கான போராட்டத்தில் ஒரு பங்களிப்பாகத்தான் நாங்கள் எங்களை எண்ணிக்கொண்டோம். பின்னோக்கிப் பார்க்கையில் கடந்த ஆண்டுகளில் நல்லதாகவும், மோசமானதாகவும் பிரம்மாண்டமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை இப்போது என்னால் காண முடிகிறது. எனினும் உண்மையான பிரச்னை என்பது இன்னமும் இருந்துகொண்டேதான் இருக் கிறது. நமது நாட்டில் சாதாரண, எளிய மக்களின் ஆட்சி என்பது இன்னமும் கைக்கெட்டாத கனவாகத்தான் நீடிக்கிறது."

—— **தோழர் ஜோதிபாசு** (1998)

இடதுசாரி கூட்டணி ஒன்றை உருவாக்கி 1977ல் மேற்கு வங்க மாநிலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற காரணமாக தோழர் ஜோதிபாசு இருந்தார். 1977 ஜூன் 21 அன்று மேற்கு வங்க முதல்வராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து 23 ஆண்டுகள் மாநில முதல்வராக பொறுப்பு வகித்தார். தானாக முன்வந்து அப்பொறுப்பிலிருந்து விலகினார். தேர்தல் காலத்தில் மக்களுக்கு அவர் உறுதியளித்திருந்த 36 அம்சங்களில் 21 திட்டங்களை அமுல்படுத்தி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்துவிடும் வழக்கமான அரசியல்வாதி தான் அல்ல என்பதை நிலை நாட்டினார்.

அவரது ஆட்சியில விவசாய தொழிலாளர் களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டது. கிராமப்புற கொத்தடிமை முறை கடுமையான நடவடிக்கை மூலம் ஒழிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கான உரிமை வழங்கப்பட்ட தோடு நியாயமான காரணங்களுக்காக தொழிலாளர்கள் மேற்கொள்ளும் எந்தவொரு வேலை நிறுத்தத்தையும் அடக்கி ஒடுக்க போலீஸ் அனுமதிக்கப்படவில்லை. போலீஸ்காரர்களும் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

அரசியல் என்பது ஆதாயம் பெறவே என்ற எண்ணம் ஆழமாக உள்ள இக்காலத்தில் நீண்ட காலம் மாநில முதல்வராக பணியாற்றிய தோழர் ஜோதிபாசு முற்றிலும் வித்தியாசமானவராக வாழ்ந்து காட்டியுள்ளார். அவர்மீது ஒரு சிறிய ஊழல் புகார்கூட ஒருவரும் கூற இடமளிக்க வில்லை என்பது தலையாய சிறப்பு.

பதவிக்காக பலர் பல முயற்சிகளை மேற் கொள்ளும் காலத்தில் தன்னைத் தேடி வந்த இந்திய நாட்டின் பிரதமர் பதவியினை கட்சிக் கட்டளையேற்று அவர் ஏற்க மறுத்தார்.

1914ல் துவங்கிய அவரது வாழ்க்கை 2010 ஜனவரி 17 அன்று நிறைவு பெற்றது. இது நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. புகழோடு தோன்றி புகழோடு மறைந்த தோழர் ஜோதிபாசுவின் நினைவினை போற்று வோம்.

சென்னை தொலைபேசி தொழிலாளர் செய்தி இதழ்

## மாநிலச் செயலரின் மடல்



அருமைத் தோழரே !

நம்மில் எவரும் தோல்வியை கொண்டாடுவது கிடையாது. ஆனால் நம்பூதிரிசங்கம் நிர்வாகத்திடம் தான் அடைந்த சரணாகதியை கொண்டாடு கிறது. ஊழியரை ஏமாற்றி அது வெற்றிவிழா எடுக்கிறது.

ஐந்து வருடத்திற்கான ஊதிய உடன்பாட்டை அதனால் உருவாக்க முடியவில்லை. 78.2 சதவிகித கிராக்கிப்படியை ஊதியத்துடன் இணைக்கவும் முடியவில்லை. நகர ஈட்டுப் படியையும், உணவுப்படியையும் அச் சங்கத்தால் காப்பாற்ற முடியவில்லை. போக்குவரத் துப்படி உள்ளிட்ட 13 படிகளை கையாலாகாத அச்சங்கத்தால் உயர்த்திட முடியவில்லை. HRA உள்ளிட்ட அனைத்து படிகளுக்கும் BHEL ஊழியருக்கு 26.11.2008 முதல் அரியர்ஸ் பெற்றுத்தந்துள்ளன அங்குள்ள தொழிற் சங்கங்கள். ஆனால் நமது நிறுவனத்தில் HRA வுக்கு மட்டுமே 27.2.2009 முதல் அரியர்ஸ் கிடைக்கும். மற்ற அலவன்ஸ்கள் அனைத்தும் 15.1.2010 முதல்தான் அமுலாகும். இதுதவிர 13 அலவன்ஸ்கள் மாற்றமே இல்லாமல் 2012 வரை தொடர சரணாகதி சங்கம் ஒப்புக்கொண்டு விட்டது.

நான்காவது மாநில மாநாட்டுக்கான பணிகள் முழுவீச்சில் துவங்கிவிட்டன. மத்திய அமைச்சர்கள், உயரதிகாரிகள், CGM கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களுடன் அரசியல் தலைவர்களும் பங்கேற்க உள்ள இம்மாநாடு சிறப்புற அமைய அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும். மாநாட்டுக்கான உறுப்பினர் நன்கொடையை உடனே வசூலித்து தரவேண்டும்.

விலைவாசி உயர்வும், திருமண மண்டபத்தின் வாடகையும் கடுமையாக உயர்ந்துவிட்டதால் வேறு வழியின்றி சார்பாளர் கட்டணமாக ரூ.300 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநாட்டை திட்டமிட்டு நடத்த சார்பாளர்களின் எண்ணிக்கை முன்கூட்டியே அறிவது மிகவும் அவசியம். எனவேதான் கிளைச் செயலாளர்கள் கிளைப் பொதுக்குழு கூட்டத்தை உரிய கால அவகாசம் தந்து கூட்டி மாநில மாநாட்டுக்கான சார்பாளர்களை தேர்வு செய்ய வேண்டும். சிறப்பு விடுப்பு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய உள்ளோம். சார்பாளர் பட்டியலை கிளைச் செயலாளர்கள் அவசியம் 6.3.2010 அன்றோ அதற்கு முன்போ மாநிலச் சங்கத்திடம் கட்டாயம் ஒப்படைத்திட வேண்டும்.

அகில இந்திய மாநாட்டுக்கு வர விரும்புவோர் தாமதிக்காமல் ரெயில் பயணத்திற் கான முன்பதிவை செய்து கொள்ள வேண்டும். பாட்னாவுக்கு நேரடியாகச் செல்ல சில ரெயில்களே உள்ளதால் தாமதம் தவிர்க்க வேண்டுகிறோம்.

ஊதிய உயர்வு உடன்பாட்டில் இன்னமும் CDM கையெழுத்திடவில்லை. இப்போது நடைப் பெற்றிருப்பது ஊதியமாற்றக்குழுவின் பரிந்துரை வெளியீடு மட்டுமே. BSNL நிர்வாகக்குழு, அமைச்சக ஒப்புதல் பெற்ற பிறகே ஊதிய உடன்பாடு அமுலுக்கு வரும் என்பதால் புதிய சம்பளம் பெறவும், அரியர்ஸ் கிடைக்கவும் இன்னும் சில மாதங்கள் ஊழியர்கள் காத்திருக்க வேண்டி யிருக்கும் என்பதே இப்போதுள்ள நிலை.

தோழமை அன்புடன்



**(சி.கே.மதிவாணன்)**
மாநிலச் செயலாளர்.
mobile: 9487621621

தலையங்கம்

# மார்ச் 5ல் விலைவாசி உயர்வுக்கு எதிராக களம் புகுவோம்!

மக்களின் முக்கிய தேவையான உணவுப் பொருட்களின் விலை மிகக் கடுமையாக உயர்ந் திருப்பதால், சமூகத்தின் அடித்தட்டில் உள்ள மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். அரிசி, கோதுமை, சர்க்கரை, காய்கறிகள் என சகலமும் இறக்கைக்கட்டி பறக்கின்றன.அரசு நடத்தும் ரேஷன் கடைகளில் மக்கள் கால்கடுக்க நின்றாலும் அத்யாவசிய பொருட்கள் நியாயவிலையில் கிடைப்பதில்லை. இந்த அநியாய விலை உயர்வுக்கு எது காரணம்? யார் பொறுப்பு?

மத்திய அரசு மாநில அரசுகள் மீது பழிபோட்டுவிட்டு ஒதுங்கிக்கொள்கிறது. மாநில அரசுகள் மத்திய அரசின் மீது குறை கூறிவிட்டு தமது பொறுப்பை தட்டிக் கழிக்கின்றன. மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் அனைவரது குற்றச்சாட்டும் தன்மீதே விழுவதால் விலை உயர்வுக்கு பிரதமரும் காரணம் என பத்திரிகையாளரிடம் வாய்த்தவறி சொல்லிவிட்டு பின்னர் அதனை மறுத்துவிட்டார். உண்மையில் மத்திய, மாநில அரசுகள் மொத்தமும்தான் விலை உயர்வால் இன்று மக்கள் படும் அவதிக்கெல்லாம் காரணம். எனவே மன்மோகன்சிங்கோ, சரத்பவாரோ, கருணாநிதியோ தமது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. அரசாள்வோரின் தவறான கொள்கை மற்றும் அணுகுமுறை காரணமாகவே வியாபாரிகள் சகட்டுமேனிக்கு விலையேற்றம் செய்து மக்களிடம் கொள்ளையடிக்கிறார்கள்; கோடிக்கணக்கில் இலாபம் குவிக்கிறார்கள். அடிக்கும் கொள்ளையில் ஒரு பகுதியையும் - குவிக்கும் கோடியில் சிறு பகுதியையும் ஆட்சியாளர்களுக்கு நன்கொடையாக அளித்துவிட்டு வர்த்தக சூதாடிகள் வறுமையில் உழலும் மக்களை வறுத்தெடுகிறார்கள். செயற்கையான பற்றாக் குறையை ஏற்படுத்தி பொருட்களின் விலையை அநியாயத்திற்கு உயர்த்துவது, அவசியப் பொருட்களை பதுக்கி வைப்பது, கருப்பு மார்க்கெட்டில் அவற்றை அதிக விலைக்கு விற்பது போன்றவை வியாபாரிகள் காலங்காலமாக கடைபிடித்துவரும் தந்திரங்களாகும். எனவே பதுக்கலுக்கு எதிராகவும், கருப்பு மார்க்கெட்டுக்கு எதிராகவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்தாலே போதும். தானாக விலைவாசி உயர்வு சரிந்துவிடும் வாய்ப்புள்ளது. ஆனால், மக்கள் விரோத பதுக்கல்காரர் களின்மீது யார் நடவடிக்கை எடுப்பது? தொழிலாளிகள் போராடினால் அத்யாவசிய சேவை பராமரிப்பு சட்டம் (ESMA) கொண்டுவந்து கைது செய்து அவர்களை சிறையில் தள்ளும் அரசாங்கம் விலை உயர்வு செய்து மக்களை வியாபாரிகள் கொடுமைப்படுத்தும் போது மட்டும் மௌனராகம் பாடுவது ஏன்?அதிரடி சோதனை நடத்தி கிடங்குகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பொருட் களை பறிமுதல் செய்து மக்களுக்கு நியாயவிலை கடைகள் மூலமாக அவற்றை வினியோகிக்க தயங் குவது ஏன்? இந்த அரசியலை நாம் புரிந்து கொண்டால் தான் நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும்; நல்லது நடக்கும்.

ஆட்சியாளர்களின் இந்த அக்கறை யின்மையை கண்டித்துத்தான் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி சார்பான அனைத்து மத்திய தொழிற் சங்கங்களும் மார்ச் 5-ல் நாடெங்கும் அறப்போராட்டம் நடத்த அறைகூவியுள்ளன. இந்த போராட்டத்தில் தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டியது அவசியமாகும். ஊதியம் பெறும் ஊழியர்களுக்கும், சங்கரீதியாக திரட்டப்பட்டவர்களுக்கும் கிராக்கிப்படி எனும் பேரில் ஓரளவுக்காவது விலைவாசி உயர்வுக்காக நிவாரணம் கிடைக்கும். ஆனால் பலகோடி உழைப்பாளிகளுக்கு எந்த நிவாரணமும் கிடைக்காது. அவர்கள் விலைவாசி நெருப்பில் வெந்து துடிப்பது தொடர்கிறது. ஆளும் அரசுகள் மக்கள் நலனை மனதில் கொள்ளாமல் வசதிபடைத்த பணக்காரர்களின் ஆலோசனைப்படி ஆட்சி நடத்துவதால்தான் விலைவாசி தாறுமாறாக உயர்கிறது.

அரிசி விலை உயரும் அதே காலகட்டத்தில் நெல்லுக்கு விலை குறையும். சர்க்கரை விலை உயரும் அதே வேளையில் கரும்புக்கு விலை குறையும். இதனை மந்திரம் என்பதா? தந்திரம் என்பதா? விலைவாசி உயர்வு என்பது பணக்காரர்களும், பெரும் வணிகர் களும் தமது லாபத்தை பெருக்கிக்கொள்ள ஏழை எளிய மக்களை கொள்ளையடிக்க திட்டமிட்டு நடத்தும் சாகசமாகும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் துணை போவதுதான் பெரும் அவமானம்.

மக்களில் ஒரு பகுதிதான் தொழிலாளர்கள். அரிசி, சர்க்கரை விலை உயர்ந்தால் அதனால் பெரிதும் பாதிக்கப்படுவதும் அவர்கள்தான். எனவே மார்ச்-5ல் விலை உயர்வுக் கொடுமைக்கு எதிராக நடக்கும் போராட்டத்தில் கட்சிபேதமின்றி சங்கபேதமின்றி அனை வரும் பங்கெடுப்போம்.

# ஏமாற்றம் தரும் ஊதிய உடன்பாடு

நமது ஊழியர்கள் மிகவும் எதிர்ப்பார்த்த ஊதிய மாற்றத்திற்கான ஒப்பந்தம் ஜனவரி 15-ல் கையெழுத்தாகியது. 36 மாதமாக இழுத்தடித்த ஊதிய பேச்சுவார்த்தை ஒருவழியாக இப்போதாவது முடிந்ததே என்ற சலிப்பில் ஊழியர்கள் இருக்க, அங்கீகரிக்கப்பட்ட சங்கமோ ''வெற்றி தினம்'' கொண்டாடுகிறது. இந்த ஊதிய உடன்பாட்டால் நமது ஊழியருக்கு இலாபத்தைவிட நஷ்டமே அதிகம் என்பதை நிச்சயம் அவர்கள் அனுபவபூர்வமாக உணர்வார்கள்.

## தாமதம் ஏன்?

DPE அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் ஊதிய பேச்சு வார்த்தையை துவங்கலாம் என 9.11.2006 அன்று உத்தரவிட்டது. பி.எஸ்.என்.எல். நிர்வாகம் ஊதிய பேச்சு வார்த்தைக்காக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பேச்சுவார்த்தைக் குழுவை 19.12.2006 அன்று அமைத்தது. ஆனால் 21 மாதங்கழித்து 3.9.2008 அன்று தான் நம்பூதிரி ஊதிய உயர்வுக்கான கோரிக்கை மனுவை நிர்வாகத்திடம் அளித்தார். ஆக துவக்கத்திலேயே தேவையன்றி 21 மாதம் தாமதமாகிவிட்டது. அதிகாரிகளின் ஊதியம் உயர்த்தப்பட்ட பிறகு ஊழியரது ஊதிய கோரிக்கையை சமர்ப்பித்தால் தான் அதிகாரிகளைவிட அதிகமான பலன்களை பெற முடியும் என்பது தான் நம்பூதிரி சங்கம் இந்த காலதாமதத்திற்கு கூறிய சமாதானம். ஆனால் நடந்ததென்ன? அதிகாரிகள் அதிகபட்சமாக 2.77 மடங்கு ஊதிய உயர்வை பெற்றனர். ஆனால் நமது ஊழியருக்கோ குறைவாக 2.5 மடங்கு உயர்வுதான் கிட்டியுள்ளது. அதிகாரிகள் ஐந்தாண்டுக்கு ஒருமுறை என ஐந்து பதவி உயர்வுக்கு ஒப்பந்தம் போட்டு முடித்த பிறகு நம்பூதிரி எட்டாண்டுக்கு ஒரு முறை என ஊழியருக்கு மூன்று பதவி உயர்வுக்காக எப்படி மோசமாக உடன்பாடு போட்டு பதவிஉயர்வில் கோட்டை விட்டாரோ அதேபோலவே இப்பொழுதும் அவர் அதிகாரிகளை விட குறைவான ஊதிய உயர்வுக்கு உடன்பாடு போட்டு ஊழியரை பெரிதும் ஏமாற்றிவிட்டார்.

## வெற்றியா? தோல்வியா?

11.9.2009-ல் நம்பூதிரி எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். **''நிர்வாகம் முன்வைத்துள்ளது போல பத்து வருட ஊதிய உடன்பாட்டை கையெழுத்திடுவது மிக எளிதானது. ஆனால் அது ஊழியருக்கு மிகப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்திவிடும்.''**

2009 செப்டம்பரில் இவ்வாறு எழுதிய நம்பூதிரி, நிர்வாகத்திடம் சரணாகதியடைந்து 2010 ஜனவரி 15-ல் நமது ஊழியருக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தும் பத்தாண்டு உடன்பாட்டில் கையெழுத்திட்டது மாபெரும் துரோகமாகும். அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஊழியருக்கு நஷ்டம் தரும் உடன்பாட்டை கையெழுத்திட்டதற்காக வெற்றி தினம் கொண்டாடுவது ''வெந்த புண்ணில் வேல்பாய்ச்சியதற்கு ஒப்பாகும்.''

FCI, Port Trust, Coal India உள்ளிட்ட பல பொதுத்துறை நிறுவனங்களில் இதேகால கட்டத்தில் மத்திய அரசின் உத்தரவின்படி 78.2 சத அகவிலைப்படி இணைப்புடன் கூடிய ஊதிய உயர்வு உடன்பாட்டை ஐந்தாண்டு காலத்திற்கு அங்குள்ள தொழிற் சங்கங்கள் கையெழுத்திட்ட போது நம்பூதிரி மட்டும் இப்படி ஊழியரை மோசம் செய்து 68.8 சத அகவிலைப்படி இணைப்புக்கு ஒப்புக்கொண்டு பத்தாண்டுக்கு உடன்பாடு போட்டதை புத்திசுவாதீனம் உள்ள எவரும் வெற்றி என கூறமாட்டார்கள். இந்த ஊதிய உடன்பாட்டில் உண்மையில் வெற்றிப் பெற்றது நிர்வாகமே. ஊழியர்களுக்கு பெரும் தோல்விதான் கிட்டியுள்ளது.

## விலைவாசி விஷம்போல் ஏறும்; ஆனால் அலவன்ஸ் மட்டும் மாறாது

காக்கைக்கு தன் குஞ்சு பொன்குஞ்சு என்பது முதுமொழி. நம்பூதிரி இதற்கு நல்ல சான்றாக விளங்குகிறார். கடந்த 16 மாதங்களாக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் நடத்திய கணக்கில்லா பேச்சு வார்த்தைக்கு பிறகும் கீழ்க்கண்ட அலவன்ஸ்கள் எந்த மாற்றமுமின்றி அப்படியே அடுத்த

பத்தாண்டுக்கு தொடரும் என உடன்பாடு அறிவிக்கிறது.

1. **டிரான்ஸ்போர்ட் அலவன்ஸ்**
2. **ஆண்டு ஊதிய உயர்வு**
3. **எஜுகேஷன் அலவன்ஸ்**
4. **ஹாஸ்டல் கட்டணம்**
5. **கிராமப்புற சேவைக்கான அலவன்ஸ்**
6. **O.T.A. விகிதம்**
7. **பயணப்படி (T.A.)**
8. **தினப்படி (D.A.)**
9. **L.T.C. சலுகை**
10. **விடுமுறைகள்**
11. **CL, EL, HPL விடுப்புகள்**
12. **ELஐ காசுக்கும் சலுகை**
13. **சீருடைக்கான அலவன்ஸ், தையல் கூலி.**

அனைத்து பொருட்களின் விலைகளும் விஷம்போல ஏறுகையில் அடுத்த பத்தாண்டுக்கும் முன்பு பெற்ற அதே அலவன்ஸ் தொகையை பெற்றுக்கொள்ள கையெழுத்திட்டது அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் கொள்கை திவாலாகிவிட்டதை அம்பலப்படுத்துகிறது.

## கேட்டது என்ன? கிடைத்தது என்ன?

தேர்தல் முடிந்ததும் அரசியல் கட்சிகள் தங்களது தேர்தல் உறுதிமொழிகளை ஒளித்து வைப்பதுபோல அங்கீகரிக்கப்பட்ட சங்கமும் இப்பொழுது தனது கோரிக்கை சாசனத்தை ஒளித்து வைத்துவிட்டது. நிர்வாகத்திடம் அது வைத்த கோரிக்கை என்ன? அதில் எந்த அளவுக்கு வெற்றி கிட்டியிருக்கிறது என்ற உண்மையை ஊழியரிடம் சொல்ல அது அஞ்சுகிறது. குறைந்தபட்சஊதியமாக ஒரு நான்காம் பிரிவு ஊழியருக்கு அச்சங்கம் கோரியது ரூ. 14000. ஆனால் இன்று கிடைத்திருப்பதோ ரூ. 7760. தொழிற் சங்கம் வைத்த கோரிக்கையில் ஐம்பது சதவிகிதத்தை நிர்வாகம் தள்ளுபடி செய்துவிட்ட பிறகும் அதனை ''வெற்றி'' என வர்ணிக்கும் துணிச்சல் ஒரு சிலருக்கு மட்டுமே வாய்க்கும். மனசாட்சியுள்ள ஒருவரும் இத்தகைய கேவலமான ஊதிய உடன்பாட்டை பிரமாதமான உடன்பாடு (Excellant Agreement) என தன் முதுகில் தானே தட்டி சபாஷ் போட்டுக் கொள்ள மாட்டார்.

மத்திய அரசு ஊழியருக்கு ஆறாவது ஊதியக்குழு 2.25 மடங்கு ஊதிய உயர்வு அளித்தது. ஆனால் பொதுத்துறை நிறுவன ஊழியரான நமக்கோ நிர்வாகமும் அங்கீகரிக்கப்பட்ட சங்கமும் கூட்டாக சதிசெய்து குறைவான மடங்கு ஊதிய உயர்வைத் தான் வழங்கியுள்ளன. பொதுத்துறை ஊழியருக்கு இணையான ஊதியம் கேட்ட மத்திய அரசு ஊழியர்கள் இன்று நம்மை விட கூடுதலாக ஊதிய உயர்வு பெற்றுவிட்டனர். பொதுத்துறை ஊழியரான பின்பும் நாம் குறைவான ஊதிய உயர்வையே பெற்றுள்ளோம். இதுதான் நம்பூதிரியின் ஒரே சாதனை; ஒப்பற்ற சாதனை!

ஐந்தாண்டுக்கான ஒப்பந்தத்தில் மட்டுமே கையெழுத்திடுவோம் என வாய்ச்சவடால் அடித்தவர்கள் இன்று வாய்மூடி மௌனிகளாகி நிர்வாகத்தின் கட்டளையை ஏற்று பத்தாண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டார்கள். இந்த ''சரணாகதி'' என்ற முழு பூசணிக்காயை ''வெற்றி தினம்'' என்ற சோற்றில் மறைத்திட முனைந்தது அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் முட்டாள்தனம். உடன்பாட்டில் கூறியிருப்பது போல இனி அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு வழங்கும் போதுதான் ஊழியருக்கும் ஊதிய உயர்வு தரப்படும் என்ற நிலை ஆபத்தானது. அதிகாரிகள் நிலைவேறு; ஊழியர்களின் நிலை வேறு. இருவரையும் ஒரே நிலையில் வைத்து பார்ப்பது நமது ஊழியருக்கு எதிர்காலத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். அதிகாரிகளுக்கு ஐந்து பதவி உயர்வுகளை பல ஆண்டுகளுக்கு முன்பே வாரிவழங்கிய நிர்வாகம் இன்னமும் அது ஒப்புக்கொண்ட மூன்று பதவி உயர்வைக் கூட ஊழியருக்கு வழங்க மறுக்கிறதே! எங்கே போனது சமன்பாடு (Parity)?

## இழப்புகளே அதிகம்!

ஊதிய உடன்பாட்டால் நகர ஈட்டுப்படி (CCA) 27.2.2009 முதல் ஒழிக்கப்படுகிறது. இதனால் நகரங்களில் வாழும் ஊழியர்களுக்கு இழப்பு. இதுவரை வழங்கப்பட்டுவந்த உணவுப் படியும் (Diet Allowance) ஒழிக்கப்படுகிறது. குடும்ப கட்டுப்பாட்டுக்கான 'இன்கிரிமெண்ட்' பழைய சம்பள தொகையிலேயே மாற்றமின்றி அடுத்த பத்தாண்டுக்கும் தொடரும் என்பதால் ஊழியருக்கு இழப்பே. சீருடை வழங்குதல், சீரு

டைக்கான தையற்கூலி தருதல் மற்றும் சீருடைக் கான அலவன்ஸ் ஆகிய மூன்றுக்கும் ஆபத்து உரு வாகிவிட்டது. இது குறித்து ''பேச்சுவார்த்தை'' தொடர்ந்து நடத்தப்படும் என்பதே இவை தொட ரப்போவதில்லை என்பதற்கு அத்தாட்சி. சீருடை, சீருடைக்கான அலவன்ஸ் ஆகியவற்றை சிறிது காலம் கழித்து ஒழித்துவிட நிர்வாகமும் அங் கீகரிக்கப்பட்ட சங்கமும் ரகசியமாக உடன்பாடு கண்டுள்ளதை மறுப்பதற்கில்லை. போனஸை மேலும் குறைத்திடவே நிர்வாகம் "Performance Management System" என்ற புது கொள்கையை புகுத்தியுள்ளது. 1.1.2007க்கு முன்பே பதவி உயர்வு பெற்று உயர் ஊதியத்தில் இருப்பவர்க ளுக்கு ''பே அனாமலி'' ஏற்படும். இவர்கள் 1.1.2007க்குப் பிறகு பதவி உயர்வு பெறும் இளைய ஊழியரைக் காட்டிலும் குறைவான ஊதி யத்தில் இருப்பார்கள் என்பதால் மீண்டும் ''பே அனாமலி'' பூதம் கிளம்பும். முதலாவது ஊதிய உடன்பாட்டால் ஏற்பட்ட ''பே அனாமலியே'' இன் றுவரை தீர்ந்தபாடில்லை. இந்த நிலையில் மீண் டும் ''பே அனாமலி'' என்பது ஊழியரை பெரும் நட்டத்துக்குள்ளாக்கும்.

## அரியர்ஸ் எவ்வளவு? எப்போது கிடைக்கும்?

கையெழுத்தான உடன்பாடு இனி BSNL இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு செல்லும். பின்னர் DOT-ன் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அதன் பின்னரே புதிய சம்பளத்தை நமது ஊழி யர் பெறுவர். முந்தைய ஊதிய உடன்பாடு கையெழுத்தான நான்குமாதம் கழித்துத்தான் உத் தரவு வெளியானது. இம்முறை எவ்வளவு காலம் பிடிக்குமோ? 2008 அக்டோபரில் கையெழுத்தான புதிய பதவி உயர்வு உடன்பாட்டையே இன்ன மும் உத்திரவிடாமல் இழுத்தடிக்கும் நிர்வாகம் இந்த ஊதிய உடன்பாட்டை என்ன செய்யும் என் பது எவருக்கும் தெரியாது. ஊதிய உடன்பாட் டில்

**"In Case an employee is in receipt of amounts morethan his entitlement the excess amount on adjustment of arreares shall be recovered"** என தெளிவாக குறிப்பிடப்பட் டுள்ளது. அதாவது பெரிய தொகை கிடைக்கும் என எதிர்ப்பார்க்கும் ஊழியருக்கு ''பிடித்தமும்'' வரலாம் என நிர்வாகம் அபாய சங்கை ஊதி யுள்ளது. இதுதான் நம்பூதிரியின் சாதனை. பிடித் தம் குறித்து மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிர் வாகம் ஏனோ அரியர்ஸ் எப்போது வழங்கப்படும் என்பது குறித்து தேதி எதையும் குறிப்பிட வில்லை.

## வேடிக்கை; வினோதம்

நமது ஊழியர்களில் ஆகப்பெரும் பகுதி ஊழியர்கள் 50 வயதை கடந்தவர்கள். பலர் இன் னும் சில ஆண்டுகளில் பணிஓய்வு பெறப்போகி றவர்கள். இதனை மறந்து உடன்பாட்டில் ஒரு அம்சம் கூறப்பட்டுள்ளது. அதாவது 40 சதவிகித ஊனமுள்ள குழந்தைக்கு பிறந்த தேதியிலிருந்து அதற்கு இரண்டு வயதாகும் வரை மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் அதிகபட்சமாக இரண்டு குழந்தைகளுக்கு வழங்கப்படுமாம். ஆனால் நமது ஊழியர்கள் பேரன், பேத்தி உள்ளவர்களா கவே இன்று உள்ளனர். இதனால் உண்மையில் சேவையில் உள்ள ஊழியருக்கு பயன்கிடைக் காது. இதற்கு பதிலாக வயது வரம்பின்றி ஊன முற்ற பிள்ளைகளுக்கு இந்த சலுகை வழங்கப் பட்டிருந்தால் அதிக ஊழியர்கள் பயன் பெற்றிருப் பர்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கம் மட்டுமே ஊதிய உடன்பாட்டில் கையெழுத்திடும் என துவக்கம் முதல் கூவிவந்த நிர்வாகம் இப்போது 'துக்கடா' சங்கங்களான TEPU, BTU, BSNLMS உள்ளிட்ட அங்கீகரிக்கப்படாத சங்கங்களின் தலைவர்களை ஊதிய உடன்பாட்டில் கையெழுத்திட அனுமதித்ததின் ''மர்மம்'' என்ன? சொன்னதைக் கேட்டுக் கொண்டு சொன்ன இடத்தில் கையெழுத்துப்போட NFTE- BSNL, FNTO உள் ளிட்ட சங்கங்கள் முன்வராது என்பதால் தான் அச்சங்கங்களை நிர்வாகம் ஊதிய பேச்சு வார்த் தையிலும், உடன்பாடு போடுவதிலும் அனும திக்க மறுத்துவிட்டதோ? பத்தாண்டுக்குப் பிறகு 2017-ல் இன்றுள்ள ஊழியரில் ஆகப் பெரும் பகுதியினர் பணியிலிருந்து ஓய்வுப் பெற்று விடு வர். எனவே அவர்களுக்கு இதுவே கடைசி ஊதிய உயர்வு. இந்த ஊதிய உயர்வில் மிகக் குறைவாக வாங்கிக் கொடுத்து - பலவற்றை இழக்கச் செய்து அவர்களின் எதிர்கால நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் 'சரணாகதி' தொழிற்சங்க வரலாற்றில் விழுந்த கரும்புள்ளி. ■

## ஊதிய மாற்றக்குழு பரிந்துரைத்துள்ள சம்பளவிகிதங்கள்

| கிரேடு | தற்போதைய சம்பள விகிதம் (ரூபாயில்) | பரிந்துரைக்கப்பட்ட சம்பள விகிதம் (ரூபாயில்) | |
|---|---|---|---|
| NE I | 4000 -120 - 5800 | 7760 - 13320 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE II | 4060 -125 - 5935 | 7840 - 14700 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE III | 4100 -125 - 5975 | 7900 - 14880 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE IV | 4250 -130 - 6200 | 8150 - 15340 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE V | 4550 -140 - 6650 | 8700 - 16840 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE VI | 4720 -150 - 6970 | 9020 - 17430 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE VII | 5700 -160 - 8100 | 10900 - 20400 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE VIII | 6550 -185 - 9325 | 12520 - 23440 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE IX | 7100 -200 - 10100 | 13600 - 25420 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE X | 7800 -225 - 11175 | 14900 - 27850 | (3% இன்கிரிமெண்ட்) |
| NE XI | 8570 - 245 - 12245 | 16370 - 30630 | (3% இன்கிரிமெண்ட்) |

பதவி உயர்வு திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ரூ 9200-250-14600 உள்ளிட்ட சம்பளவிகிதங்களுக்கான புதிய சம்பளவிகிதங்கள் DOTயின் ஒப்புதல் கிடைத்த பிறகே அறிவிக்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கம் தான் கோரிய ரூ.14,000த்தை குறைந்தபட்ச ஊதியமாக பெறாமல் மிகக்குறைவான ரூ.7760க்கு சரணாகதியடைந்தது மிகப்பெரிய துரோகமாகும். அதிகாரிகளுக்கு துவக்க ஊதிய உயர்வு 1.91 மடங்கானாலும் இறுதியில் அது 2.77 மடங்கு உயர்ந்தது. ஆனால் ஊழியர்களைப் பொறுத்தவரை இறுதியில் வெறும் 2.3 முதல் 2.5 மடங்கு உயர்வாகவே அது அமைந்துள்ளது. இது பாரபட்சமாகும். அதிகாரிகளுக்கு இணையாக பதவி உயர்வை பெறத்தவறிய நம்பூதிரி இப்பொழுது ஊதிய உயர்விலும் கோட்டைவிட்டுவிட்டார். முந்தைய சம்பளவிகிதத்தில் ரூ 7100 பெற்ற TTA, Sr TOA (OTBP) ஊழியர்களின் ஊதிய விகிதம் உயர்வதற்கு பதிலாக கீழிறக்கப்பட்டுள்ளது. கடந்த ஊதிய உடன்பாட்டில் நாம் ரூ 1500 குறைந்தபட்ச ஊதிய உயர்வு பெற்றோம். ஆனால் இப்போதைய ஊதிய உடன்பாட்டில் குறைந்தபட்ச ஊதிய உயர்வு என்று எதுவும் கூறப்படவில்லை. எவ்வளவு என்பது கையில் கிடைக்கும்போதுதான் தெரியவரும். கடந்த முறை ஊதிய உடன்பாடு 2002ல் கையெழுத்தானாலும் HRA-வை 2000 முதல் பெற்றோம். ஆனால் இப்பொழுது உடன்பாடு 15.1.2010 அன்று ஏற்பட்டது. ஆனால் HRA அரியர்ஸ் 27.2.2009 முதல்தான் வழங்கப்படும்.

## ஏமாற்றிய நம்பூதிரி

**I. துறைமுக தொழிலாளரின் ஊதிய உடன்பாடு**

இது ஐந்தாண்டுக்கான ஒப்பந்தம். இதில் போக்குவரத்துப் படி ரூ.180லிருந்து ரூ.270 என உயர்த்தப்பட்டது. 78.2 சதவிகித கிராக்கிப்படி இணைக்கப்பட்டது.

**II. BHEL ஊழியரது ஊதிய உடன்பாடு**

இது 31.12.2006 அன்று பணியில் உள்ள அனைத்து ஊழியருக்கும், 1.1.2007ல் அல்லது அதற்கு பின்பு பணியில் சேர்ந்த ஊழியரனைவருக்கும் பொருந்தும்.

HRA வுக்கான நிலுவைத்தொகை 26.11.2008 முதல் BHEL ஊழியருக்கு வழங்கப்படும். மற்ற எல்லா அலவன்ஸ்களும் கூட 26.11.2008 முதல் நிலுவையுடன் வழங்கப்படும்.

**III. ஆறாவது ஊதியக்குழு** : போக்குவரத்துப்படி உயர்த்தப்பட்டதுடன் இதனை பெற நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

நிர்வாகத்திடம் சரணாகதியடைந்து ஊழியருக்கு துரோகம் இழைத்த நம்பூதிரி வெட்கமின்றி தனது தோல்வியை வெற்றி என கூப்பாடு போடுகிறார். தனது துரோக ஒப்பந்தத்தை வரலாறு காணா ஒப்பந்தம் என்று பொய்ப்பிரச்சாரம் செய்கிறார். ஊழியர்கள் இந்த பொய்ப் பிரச்சாரத்தினை செவிமெடுக்காமல் நூற்றுக்கணக்கில் நாடு முழுவதிலும் நம்பூதிரி சங்கத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டு NFTE-BSNL-லில் இணைக்கின்றனர். இதனால் அதிர்ச்சியடைந்த நம்பூதிரி நிறுவனத்தின்

நிதிநிலை மோசமாக இருப்பதால்தான் ஊதிய உடன்பாட்டில் ஊழியருக்கு அதிகமாக பெற்றுத்தர இயலவில்லை என ஒப்புதல் வாக்குமூலம் தந்து ஒப்பாரி வைக்கிறார். எது எப்படியாயினும் நமது ஊழியர்கள் நம்பூதிரி கையெழுத்திட்ட ஊதிய உடன்பாட்டால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. உதாரணத்திற்காக ஒரு சில :

BHEL ஊழியருக்கு HRA 26.11.2008 முதல் உயர்த்தப்பட்டு ஊழியருக்கு நிலுவைத்தொகை வழங்கப் படும். ஆனால் BSNL ஊழியருக்கு HRAவுக்கு 27.2.2009 முதல் தான் நிலுவைத்தொகை வழங்கப் படும். BHEL ஊழியருக்கு மற்ற எல்லா அலவன்ஸ்களும் 26.11.2008 முதல் நிலுவையுடன் வழங்கப்படும். ஆனால் BSNL ஊழியருக்கோ அனைத்து அலவன்ஸ் களும் 15.01.2010 முதல் தான் நிலுவையுடன் வழங்கப்படும்.

துறைமுக ஊழியரது ஊதிய உடன்பாடு ஐந்தாண்டு காலத்திற்கு மட்டுமே. ஆனால் BSNL லில் இது பத்தாண்டு காலத்திற்கு நீடிக்கும். துறைமுக ஊழியரின் ஊதிய நிர்ணயிப்பு 78.2 சதவிகித கிராக்கிப்படி இணைப்புடன் செய்யப்படும். ஆனால் BSNL ஊழியரது ஊதிய நிர்ணயிப்போ 68.8 சதவிகித கிராக்கிப்படி இணைப்புடன்தான். துறைமுக ஊழியருக்கு போக்குவரத்துப்படி ரூ.180லிருந்து ரூ.270க்கு உயர்த்தப்பட்டது. ஆனால் BSNL ஊழியரோ அடுத்த பத்தாண்டுக்கு (2017 வரை) எவ்வித உயர்வுமின்றி பழைய டிரான்ஸ்போர்ட் அலவன்ஸையே பெறுவர்.

## பணி நீக்கத்தை ரத்து செய்க

பெரம்பூர் DTO வில் பணிபுரிந்து வந்த தோழர் தனஞ்செயடு TM(O) அவர்கள் நிறுவனம் சாராத பிரச்சனைக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். இதனடிப்படையில் அவரை நிர்வாகம் முதலில் சஸ்பெண்ட்செய்து பின்னர் டிஸ்மிஸ் செய்தது. நீதிமன்ற தண்டனையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்தார். பிரச்சனைக்கு சுமூக தீர்வு ஏற்பட்டதால் உயர்நீதிமன்றம் அவருக்கு அளித்த தண்டனையை ரத்து செய்ததுடன் அவர்மீதான குற்றச் சாட்டுக்களையும் தள்ளுபடி செய்தது. இன்னமும் 12 ஆண்டுகள் சேவைக்காலம் இருப்பதால் தோழர் தனஞ்செயடு நிர்வாகத்திற்கு தன்னை மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுகோள் அனுப்பினார். ஆனால் நிர்வாகம் இதில் காலதாமதம் செய்ததால் மாநிலச் செயலாளர் 27.1.2010ல் GM(D) அவர்களுடனும், DGM அவர்களுடனும் இதுகுறித்து பேசினார். வேலையின்றி அந்தத் தோழர் படும் கஷ்டத்தை எடுத்துச்சொல்லி உடனடியாக அவரை பணிக்கு எடுக்க வற்புறுத்தினார். நிர்வாகம் இதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துவதாக உறுதி கூறப்பட்டது.

நிறுவனத்தில் அந்த தோழர் எந்த தவறையும் செய்யவில்லை. வெளியில் ஏற்பட்ட பிரச்சனைக்காக ஒரு நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை காரணம் காட்டித்தான் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார். எனவே இப்பொழுது உயர்நீதிமன்றமே அவரை குற்றமற்றவர் என தீர்ப்பளித்து அவர் மீதான குற்றச்சாட்டுக்களை தள்ளுபடி செய்தபிறகு அவருக்கு மீண்டும் பணி தர காலதாமதம் செய்ய நிர்வாகத்திற்கு நியாயமான காரணம் எதுவும் இல்லை. மாநிலச் செயலாளர் டில்லி செல்வதால் அங்குள்ள உயரதிகாரிகளுடனும் இப்பிரச்சனை குறித்து விவாதித்து தீர்வு காண முனைந்துள்ளார்.

## மாநிலச் செயற்குழு கூட்டம்

4வது மாநில மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வேலையறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை ஆகியவற்றை இறுதி செய்திட மாநிலச்செயற்குழு கூட்டம் **27-2-2010 (சனி) மதியம் 2 மணிக்கு** மாநிலத் தலைவர் வி.ராதாகிருஷ்ணன் தலைமையில், ஏ.கே.நாயக் பவனில் நடைபெறும். அனைத்து மாநிலச் சங்க நிர்வாகிகளும், கோட்டச் செயலாளர்களும், நிரந்தர அழைப்பாளர்களும் இதனையே அழைப்பாக கருதி குறித்த நேரத்தில் தவறாமல் வருகை தர வேண்டுகிறேன்.

**சி.கே.மதிவாணன்**
மாநிலச் செயலாளர்

03-02-2010
சென்னை - 23

# 'ஜனவரி' மாத நிகழ்வுகள்

**6** மாதாந்திர பொதுக்குழு கூட்டம். சங்க முழக்கம் இதழ் வினியோகிக்கப்பட்டது. அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து அறைகூவியுள்ள மார்ச் 5 அறப்போராட்டத்தில் நாமும் பங்கேற்க தீர்மானிக்கப்பட்டது.

**8** DGM (A) மற்றும் GM (O) அவர்களை சந்தித்து தந்திப்பகுதி மாற்றல்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் மாநிலச் சங்கத்தின் சார்பில் தோழர்கள் சி.கே.எம்., ராதாகிருஷ்ணன், சத்யமூர்த்தி, கோதண்டபாணி பங்கேற்றனர்.

**11** நாடு தழுவிய அறைகூவலை ஏற்று தொழிலாளர் கூட்டணி சார்பில் தமிழ்மாநிலச் சங்கமும், சென்னை தொலைபேசியும் இணைந்து அண்ணாசாலை அஞ்சலகத்தின் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம். தோழர்கள் லிங்கமூர்த்தி, தமிழ்மணி தலைமையேற்பு. FNTO சம்மேளன பொதுச்செயலாளர் வள்ளிநாயகம், NFTE சம்மேளனச் செயலர் சி.கே.எம், தமிழ் மாநிலச் செயலாளர் பட்டாபிராமன், FNTO தலைவர் ஆண்டியப்பன் மற்றும் தோழர் பிரபாகரன் (AIOBC) உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர். ஊதிய உடன்பாட்டை காலதாமதமின்றி நிறைவேற்றக்கோரி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**18** DGM(A), GM(O) ஆகியோருடன் சந்திப்பு. தோழர்கள் சி.கே.எம்., லிங்கமூர்த்தி, ராதா கிருஷ்ணன், ராமசாமி பங்கேற்பு. மாலையில் செயலகக்கூட்டம் நடந்தது. இதில் தோழர் மணி ACS இணைத்துக்கொள்ளப்பட்டார்.

**19** துரோக ஒப்பந்தத்தை கண்டித்து பூக்கடை வளாகத்தில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம். தோழர் லிங்கமூர்த்தி தலைமையில் தோழர்கள் சி.கே.எம்., பிரபாகரன் பங்கேற்று பேசினர். ஏமாற்றம் தந்த உடன்பாடு என்ற நான்குபக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

**27** GM(D) அவர்களுடன் சந்திப்பு. பணீநீக்கம் செய்யப்பட்டதோழர் தனஞ்செயடு TM(O) , பெரம்பூர் DTO அவர்களை மீண்டும் பணியில் எடுக்க வற்புறுத்தப்பட்டது. மாலையில் G.M.(South) அலுவலக வளாகத்தில் பரங்கிமலை கோட்ட மாநாடும், GM(S) கிளை மாநாடும் இணைந்து நடத்தப்பட்டது.

**29** GM(O) அவர்களுடன் சந்திப்பு. தோழர்கள் சி.கே.எம்., ராதாகிருஷ்ணன், ராமசாமி, சத்ய மூர்த்தி பங்கேற்றனர். மாலையில் தின்ரோஸ் இணைப்பக வளாகத்தில் வரவேற்புக்குழு கூட்டம் நடைபெற்றது. நான்காவது மாநில மாநாட்டை சிறப்பாக நடத்த ஆலோசனை கலக்கப்பட்டது.

---

## INTUC, BMS, AITUC, HMS, CITU, AICCTU

## மார்ச் 5-ல் அறப்போராட்டம்

- **விலைவாசி உயர்வை தடுத்து நிறுத்திட**
- **பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு விற்பனை செய்வதை தடுத்திட**
- **பொருளாதார மந்தத்தை பயன்படுத்தி வேலையிலிருந்து தொழிலாளரை வெளியேற்றுவதை தடுத்திட**
- **அமைப்புரீதியாக திரட்டப்படாத தொழிலாளருக்காக சமூகபாதுகாப்பு நிதியம் அமைந்திட**
- **தொழிலாளர் நலச்சட்டங்களை - உரிமைகளை அரசும் நிர்வாகமும் மீறுவதை தடுத்திட**

நாட்டின் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் ஒன்றுப்பட்டு மக்கள் நலனுக்காகவும்,தொழிலாளர் உரிமை காத்திடவும் மூன்றாவது கட்டமாக மார்ச் 5ல் நாடு தழுவிய அறப்போராட்டத்தை (சத்யாகிரகம்) அறைகூவியுள்ளனர். இந்த அறைகூவலை ஏற்று **NFTE-BSNL** சம்மேளனமும் இதில் பங்கெடுக்க தீர்மானித்துள்ளது. எனவே சென்னையில் நமது தோழர்கள் மார்ச் 5-ல் நடைபெறவுள்ள அறப்போராட்டத்தில் பெருந்திரளாக சங்கப்பதாகை மற்றும் கொடிகளுடன் பங்கெடுக்க தயாராகவேண்டும்.

# பாமரனின் கேள்விக்கு பட்டாளியின் பதில்

★ இலங்கை ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ராஜபட்சே வெற்றி பெற்றுவிட்டாரே?

● தேர்தல் முறைகேடுகளை செய்து, பணத்தை வாரியிறைத்து தேர்தலில் வெற்றிவாகை சூடுவது தமிழக அரசியல்வாதிகளுக்கு மட்டுமே தெரிந்த கலை இல்லையே ! தமிழர்கள் பெருமளவில் வாக்களிக்காததும் ராஜபட்சேவின் வெற்றிக்கு காரணமாக இருக்கலாம். தமிழக பகுதிகளில் சரத்பொன்சேகாவுக்கே அதிக வாக்குகளும், ஆதரவும் கிட்டியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சம். அதேபோல சிங்கள இனத் தவரிடையே ராஜபட்சேவுக்கே பெருத்த ஆதரவு இருப்பது சிங்கள பேரினவாத சக்திகளின் பிரதிநிதி யாரென்று காட்டுகிறது. தவறாமல் தேர்தல்கள் நடப்பதாலேயே ஒரு நாட்டை ஜனநாயக நாடாக ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் எந்த நாட்டுக்கும் ஜனநாயக நாடென கூறிக்கொள்ளும் தகுதியில்லை. என்ன செய்வது? இலங்கையில் சர்வாதிகாரம் தலைதூக்க இந்த தேர்தல் கதவை திறந்துவிட்டுள்ளது.

★ BPO பணிகளை இந்தியாவுக்கு வழங்கும் அமெரிக்க கம்பெனிகளுக்கு வரிசலுகை ரத்தாகும் என ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளாரே?

● இது இந்தியா I.T. துறைக்கு பேரிடியாக இருக்கப் போகிறது. ஏற்கனவே மேற்குலகின் பொருளாதார மந்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் Information Sector அமெரிக்க ஜனாதிபதியின் இம்முடிவால் மேலும் பாதிக்கப்படும். சுதந்திர வியாபாரம் பற்றி வாய்க்கிழிய பேசுவோர் தம்நாட்டு நலன் என்று வந்துவிட்டால் எப்படி உள்தாழ்ப்பாள் போட்டுக் கொள்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அத்தாட்சி. இந்தியா உள்ளிட்ட வளர்முக நாடுகளின் சந்தையை தமக்கு திறந்துவிடவேண்டும் என வற்புறுத்தும் மேற்குலகின் நாடுகள், WTO, IMF, உலக வங்கி அமைப்புகள் அமெரிக்காவின் இந்த முடிவினை என்னச் சொல்லி நியாயப்படுத்துவார்கள்? ஊருக்கு உபதேசம் செய்யும் அமெரிக்கா தனதுநாட்டின் நலனை பாதுகாக்க எதையும் செய்யும் என்பது இப்போது மீண்டும் அம்பலமாகியுள்ளது.

**சரியா? முறையா?**

★ பணி ஓய்வு பெற்ற பிறகும் முன்னாள் தலைமைப் பொதுமேலாளர் வேலுசாமி அடிக்கடி அலுவலகம் வந்து CGM இல்லாதபோதிலும் அவரது அறையில் அமர்ந்து கொள்வதும் அவரை அழைத்துவரவும் வீட்டுக்கு திருப்பி அனுப்பவும் நிறுவனத்தின் காரை பயன்படுத்துவதும் முறைதானா? நெறிதானா? ஓய்வுபெற்ற பிறகு அவருக்கு இங்கு என்ன வேலை?

★ ஜனவரி 26ல் நடைப்பெற்ற குடியரசு தினவிழாவில் தலைமைப் பொது மேலாளர் சுப்பிரமணியம் அவர்கள் பகிரங்கமாக மைக்கில் தனியார் தொலைபேசி நிறுவனங்களின் சேவையை பாராட்டி பேசியதும், BSNL சேவையை விமர்சனம் செய்ததும் சரிதானா? நான்கு சுவர்களுக்குள் பேசவேண்டியதை ஊரே கேட்கும்படி அவர் பேசியது முறைதானா? Please Avoid Washing dirty linen in public

## புதிய நிர்வாகிகள்

| தேதி | கிளை கோட்டம் | தலைவர் | செயலர் | பொருளாளர் |
|---|---|---|---|---|
| 27.01.2010 | பரங்கிமலை கோட்டம் | P. அர்ஜுணன் T.M. | S. தயாபர மூர்த்தி Sr TOA (G) | S. பவுன்ராஜ் T.M. |
| 27.01.2010 | GM(South) அலுவலக கிளை | M.A. கணபதி SSS | J. பத்மநாபன் Sr TOA (G) | மகேந்திரன் Sr TOA (G) |

## வரவேற்கிறோம்

நமது சங்கத்தில் இணைந்த கீழ்க்கண்டோரை வரவேற்கிறோம்

1. தோழியர் ரத்னா, Gr 'D', பொன்னேரி.
2. தோழர் சஞ்சீவ் குமார் சௌத்திரி, TTA, மீஞ்சூர்.
3. தோழர் சுமன் சௌரவ், TTA, மீஞ்சூர்.
4. தோழர் B. பிரபாகரன், மீஞ்சூர்.
5. தோழர் C.ஆனந்தன், TTA, கும்முடிப்பூண்டி.
6. தோழர் K. மகேந்திரன், T.M, கும்முடிப்பூண்டி.
7. தோழர் K.வரதன், R.M, கும்முடிப்பூண்டி.
8. தோழர் J. கௌரி, Gr.'D' கும்முடிப்பூண்டி.
9. தோழர் G. சுகுமாரி, Gr.'D' கும்முடிப்பூண்டி.

---

## 2012 என்பது கானல்நீர் !

நிர்வாகம் பல அலவன்ஸ்களை உயர்த்தாமல் பழைய தொகையையே கொடுத்துவிட்டு ஆனால் ஊழியரை ஏமாற்றவும் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தை சமாதானப்படுத்தவும் 2012ல் அவற்றை மறுஆய்வு செய்து உயர்த் தித்தருவதாக கூறியுள்ளது. 2012ல் நிறுவனத்தின் நிதி நிலை எப்படியிருக்கும் என்பதை இப்போது எவராலும் கூறிட இயலாது. நாளுக்குநாள் சரிந்துவரும் சந்தைப் பங்கும் வருமானமும் ஏற்கனவே நமது நிறுவனத்தை நஷ்டத்தில் தள்ளிவிட்டது. ஆனால் நிர்வாகம் வங்கி முதலீடுகளால் கிடைக்கும் வட்டிப்பணத்தைக் கொண்டு இலாபத்தில் நிறுவனம் இயங்குவதாக பொம்மலாட்டம் நடத்துகிறது. வங்கி வட்டியை கணக்கில் சேர்க்காவிட்டால் நமது நிறுவனம் 2007-2008, 2008-2009 நிதியாண்டு களிலேயே நஷ்டமடைந்துவிட்டது என்பது புரியும்.

**2007-2008 :**

சேவை மூலம் மொத்த வருவாய் ரூ. 32842.30 கோடி

மொத்த செலவு : ரூ. 33629.86 கோடி

உண்மையான நஷ்டம் (அ) பற்றாக்குறை ரூ.787.56 கோடி

ஆனால் நிர்வாகம் பொய்யாக அறிவித்த லாபம் ரூ.3001 கோடி

**2008 - 2009 :**

சேவை மூலம் மொத்த வருவாய் : ரூ.20268.57 கோடி

மொத்த செலவு : ரூ. 34354.21 கோடி

உண்மையான நஷ்டம் (அ) பற்றாக்குறை ரூ.4085.64 கோடி

ஆனால் நிர்வாகம் பொய்யாக அறிவித்த லாபம் ரூ.574 கோடி

"மந்திரம்" நடந்தாலன்றி நிறுவனத்தின் வருவாயும் இலாபமும் 2012ல் உயர்வது சாத்தியமில்லை. இந்த சூழலில் இப்போதே அனைத்து அலவன்ஸ்களையும் உயர்த்திடாமல் 2012 வரை காத்திருக்க ஒப்புக் கொண்டது நம்பூதிரியின் மிகப்பெரிய தவறாகும். மூன்றாண்டாய் பேச்சுவார்த்தை நடத்திய அங்கீகரிக்கப்பட்ட சங்கம் முடிவில் 13 அலவன்ஸ்களை மாற்றமே இல்லாமல் - உயர்வே செய்யாமல் பழைய நிலையே தொடர ஒப்புக்கொண்டது மன்னிக்க முடியாத குற்றமாகும். தவிர 2012க்கு முன்பாக பணிஓய்வு பெறுபவர்களுக்கு பெரும் நஷ்டமே காத்திருக்கிறது என்பதும் உண்மை. அனுபவமின்றி சொந்த புத்தியுமின்றி ஊழியரின் ஊதிய உயர்வில் அக்கறையுமின்றி அங்கீகரிக்கப்பட்ட சங்கம் நிர்வாகம் சொன்னதற்கெல்லாம் தலையசைத்து ஆமோதித்ததால் இன்று பாதிப்புக்குள்ளானது 2.5 லட்சம் ஊழியர்தாம்.

---

## வருந்துகிறோம்

வரலாறு காணாத அளவில் கடுமையான பூகம்பத்தால் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஹைதி நாட்டில் மாண்ட கொடுமை நமது நெஞ்சங் களை உலுக்கியது. அந்த நாட்டின் ஜனாதிபதி மாளிகை உட்பட பெரும்பாலான கட்டிடங்கள் தரைமட்டமாகி விட்டன. உலகநாடுகளின் உதவியும்கூட அம்மக்களுக்கு உரிய வகையில் உரிய நேரத்தில் போய்ச் சேராததால் இடிபாடுகளுக்குள் சிக்கித்தவிக்கும் பலரின் உயிரை காப்பாற்ற முடியாத சோகம் அந்நாட்டில் அரங்கேறியுள்ளது. இப்பேரழிவிலிருந்து அந்நாடு மீண்டு சகஜநிலைக்கு திரும்ப பலகாலம் பிடிக்கும் என்றே தோன்றுகிறது. நமது ஆழ்ந்த அஞ்சலியை ஹைதி நாட்டிற்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆசிரியர் குழு**

**எஸ்.டி. நாகூர்மீரான், எஸ். மகாராஜன், என். தனபால், எஸ். காளியப்பன், ஏ. நமச்சிவாயம்**

**அலுவலக உதவி : ஜி. அன்புகுமார்**

**மின் அஞ்சல் :** ckmathivanan@gmail.com **இணையதளம்:** www.nftechennai.org

**தொலைபேசி :** 28251186, 2674 4444. **கைபேசி :** 9487 621 621

## Notification issued in accordance with the Provisions of Union Constitution.

### மாநிலமாநாடு அறிவிக்கை

NFTE-BSNL, சென்னை தொலைபேசி மாநிலச் சங்கத்தின் நான்காவது மாநாடு சென்னை புரசைவாக்கம் தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் 2010 மார்ச் 12,13,14 தேதிகளில் மாநிலத் தலைவர் V. ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

அனைத்து கிளைச் சங்கங்களும் பொதுக்குழுவைக்கூட்டி சார்பாளர் தேர்வினை நடத்திடவேண்டும். சார்பாளர் பட்டியலை 6.3.2010 அன்றோ அதற்கு முன்போ மாநிலச் செயலரிடம் தவறாமல் ஒப்படைத்துவிடவேண்டும்.கீழ்க்கண்ட அம்சங்கள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும்.

1. அறிக்கை
2. தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை.
3. அமைப்புநிலை.
4. பிரச்சினைகள் தீர்வு.
5. நீதிமன்ற வழக்கு.
6. நிர்வாகிகள் தேர்வு.
7. தீர்மானங்கள்
8. இன்னபிற.

03.02.2010.
சென்னை - 23

**(சி.கே. மதிவாணன்)**
மாநிலச் செயலாளர்
NFTE-BSNL
சென்னை தொலைபேசி

### அகில இந்திய மாநாடு

**நமது சம்மேளனத்தின் அகில இந்திய மாநாடு ஏப்ரல் 9,10,11 தேதிகளில் பாட்னாவில் நடைபெறும். ஏப்ரல் 8-ல் தேசீய செயற்குழு கூட்டம் நடைபெறும். பாட்னா மாநாட்டில் பங்கேற்க விரும்பும் தோழர்கள் தாமதிக்காமல் ஏப்ரல் 6 பாட்னா புறப்படவும், ஏப்ரல்12 சென்னை திரும்பவும் ரயிலில் முன்பதிவு செய்து கொள்ளவும். கூடுதலான தோழர்கள் முன்பதிவு செய்தால் நாம் கூடுதல் ரெயில் பெட்டிகளை இணைக்க ஏற்பாடுகளை செய்வோம்.**

## SC/ST ஊழியர் நலச்சங்க தேர்தலில் ஜனநாயகப் படுகொலை

SC/ST நலச்சங்கத்தின் அகில இந்திய தலைவர்களுக்குள் ஏற்பட்ட கருத்துவேறுபாடை சுமூகமாக தீர்க்க முடியாத நிர்வாகம் புதிய நிர்வாகிகள் தேர்வு நடத்துவதற்காக ஒரு குழுவை அமைத்தது. ஜனவரி மாத இறுதியில் மத்தியப் பிரதேச தலைநகர் போபாலில் நடைப்பெற்ற SC/ST ஊழியர் நலச்சங்க அகில இந்திய மாநாட்டை நிர்வாகம் கூட்டியது.

ஆனால் நாடு முழுவதும் இருந்து போபால் மாநாட்டில் பங்கெடுக்கச் சென்ற SC/ST ஊழியர் நலச்சங்க அகில இந்திய தலைவர் T.முத்து கிருஷ்ணனுக்கு ஆதரவான 600க்கும் மேற்பட்ட சார் பாளர்களை மாநாட்டிற்குள் அனுமதிக்க மறுத்து காவல் துறையை ஏவி அவர்களை மாநாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு ரகசியமாக தேர்தலை நடத்தி ஜனநாயகப் படுகொலையை செய்துள்ளது நிர்வாகம்.

நிர்வாகத்திடம் ஏற்கனவே ஊதிய உடன் பாட்டில் சரணாகதியாகிவிட்ட நம்பூதிரியின் ஆதர வாளர்கள் இம்மாநாட்டில் வெற்றிப் பெற இயலாத அள வுக்கு சிறுபான்மையினராகிவிட்டதால்தான் நிர்வாகம் திரு.முத்துகிருஷ்ணனின் ஆதரவாளர்களை தேர்தலில் பங்கெடுக்காமல் தடுத்து இத்தகைய ஜனநாயக படு கொலையை அரங் கேற்றியுள்ளது. ஆமை புகுந்த வீடு போல் நம்பூதிரி நுழைந்த SC/ST ஊழியர் நலச் சங்கம் ஆகிவிட்டதே !

வரலாறு தெரிந்து கொள்வோம் :

# தலைநகரை மீட்ட தலைவர்

சென்னை ஆயிரம்விளக்கின் சால்வான் குப்பத்தில், எளிய குடியில் பிறந்தாலும் அயராத உழைப்பால், ஆற்றலால் ஏற்றம் பெறலாம் என்பதை உணர்த்தியவர் ம.பொ.சி. என்றழைக்கப்படும் மயிலாப்பூர் பொன்னு சாமி சிவஞானம். சித்தாள், நெசவுத்தொழிலாளி, அச்சுத் தொழிலாளி என வாழ்வியல் நிமித்தம் பல்வேறு தொழில்களை அவர் செய்தார்.

காந்தியத்தின்பால் ஈர்க்கப்பட்டு 1927-ம் ஆண்டு காங்கிரசில் இணைந்த ம.பொ.சி. உப்புச் சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு இயக்கம் ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டார். கள் இறக்கும் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்தாலும், சென்னைப் பெருநகர மதுவிலக்கு குழுச் செயலராகப் பொறுப்பேற்றுத் தீவிரப் பிரசாரம செய்த காரணத்தால்தான் ஜாதி மக்களின் பகையைத் தேடிக் கொண்டார்.

ஆகஸ்ட் கிளர்ச்சி தொடங்கி, வெள்ளையனே வெளியேறு என்ற முழக்கம் நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கிய காலம், ம.பொ.சி.யும் போராட்டத்தில் ஈடுபட்டு, 1942-ம் ஆண்டு வி.வி.கிரி, கு.காமராஜ், முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி ஐயர், சஞ்சீவி ரெட்டி போன்ற தலைவர்களுடன் சிறையில் அடைக்கப் பட்டார்.

1947-ம் ஆண்டு இந்திய விடுதலைக்குப் பிறகு இந்தியா முழுவதும் பல்வேறு தேசிய இனங்களும் கிளர்ந்தெழுந்த காலகட்டத்தில், இந்தியாவில் இருந்த பிறமொழி வழி இனத் தலைவர்கள், தங்களுக்கென இன மொழி வளர்ச்சிக்காகத் தனி மாநிலக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களைத் தொடங்கினர்.

தமிழ் இன உணர்வாளர்களும் தேசியவாதி களும் பிளவுபட்டிருந்த நேரத்தில், தமிழின உணர்வும் உரிமையும் தேச ஒருமைப்பாடும் வேறு வேறல்ல என்பதைத் தேசியத் தலைவர்களுக்கும் பிரிவினைச் சக்திகளுக்கும் உணர்த்தும் வகையில் உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம் என்று முழங்கித் தேச உணர்ச்சி, மொழி உணர்ச்சி என இரண்டையும் வளர்த்தெடுத்தார் ம.பொ.சி.



1956-ம் ஆண்டு நவம்பர் முதல் நாள் தமிழகம் தனி மாநிலம் ஆனது. முன்னதாக பொட்டி ஸ்ரீராமுலு என்கிற ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தொண்டர் உண்ணாவிரம் இருந்து ஆந்திரப் பிரிவினையைக் கோரினார். சென்னை ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் இருந்த புலுசு சாம்பமூர்த்தி என்ற ஆந்திரத் தலைவரின் இல்லத்தில் தனது உண்ணா விரதத்தை 1952-ம் ஆண்டு அக்டோபர் 14-ம் நாள் தொடங்கினார். ஆந்திரத் தலைவர்களான பிரகாசம், புலுசு சாம்பமூர்த்தி போன்றோர் அவரை ஆதரித்தனர். சென்னையைத் தலைநகராகக் கொண்ட ஆந்திர மாநிலம் அமைய வேண்டும என்பதே அவர்தம் கோரிக்கை. மதராஸ் மனதே என்ற முழக்கத்தோடு பட்டினி கிடந்த ஸ்ரீராமுலுவைக் காணச் சென்ற ம.பொ.சியிடம் பிரகாசம், ஸ்ரீராமுலுவின் உயிரைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டும் என்று கோர, அதற்கு ம.பொ.சி., சென்னை நகர் மீது உரிமை கொண்டாடுவதை விட்டு ஆந்திர மாநிலம் கோரினால், தமிழரசுக் கழகம் ஆந்திரர்களுடன் பூரணமாக ஒத்துழைக்கும் என்று பதிலிளித்தார். பிரகாசம் விடாமல், ஆந்திர அரசு தற்காலிகமாக வேனும் சென்னையிலிருக்க அனுமதித்தாலும் போதும். விசால ஆந்திரம் அமையும் போது எங்களுக்கு ஹைதராபாத் கிடைத்துவிட்டால் நாங்கள் போய்விடுவோம். இதற்கு நீங்கள் இசைந்துவிட்டால், மற்றவர்கள் எதிர்க்க மாட்டார்கள் என்று கூறிய போதும், ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகச் சென்னையில் இடமளிக்க மற்றவர்கள் இசைந்தாலும், நான் இசையமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட்டுத் திரும்பினார் ம.பொ.சி.

1952-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் நாள் பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே உயிர் துறந்தார். அப்போது ஆந்திரத்தில் ஏற்பட்ட

கலவரம் தொடர்ந்து மூன்று நாள்கள் நீடித்தது. நிலைமை மேலும் மோசமாகக் கூடுமென்ற அச்சத்தால், ஆந்திர மாநிலம் 2-10-1953 அன்று பிரிக்கப் படுமென்று நாடாளுமன்றத்தில் நேரு அவசரமாக அறிக்கை வெளியிட்டார். சென்னை நகரம் அல்லாத தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு பேசும் மாவட்டங்களைக் கொண்டு சித்தூர் மாவட்டம் முழுவதையும் சேர்த்து ஆந்திர மாநிலம் அமையும் என்றும் தலைநகர் பின்னர் அறிவிக்கப்படும் என்றும், நேரு தம் அறிவிப்பில் விளக்கியிருந்தார்.

சித்தூர் மாவட்டத்தின் தெற்கேயுள்ள பகுதிகள் தமிழகத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே தமிழரசுக்கழகம் கோரிவந்த நிலையில், சித்தூர் ஆந்திரத்தில் சேர்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதும், பிரகாசம் மீண்டும், சென்னையை இரு பகுதியாகப் பிரித்துக் கூவத்தை நடுவில் வைத்து வடசென்னையை ஆந்திரத்துக்கும், தென் சென்னையைத் தமிழ்நாட்டுக்கு மாகப் பங்கு போடவேண்டும் அல்லது சென்னை நகரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கும் பொது நகராகச் செய்ய வேண்டும் என்று அறிக்கை விட்டதும் தமிழகத்தின் நிலையைக் கேள்விக் குள்ளாக்கியது.

அப்போது சென்னை மாநகராட்சியின் ஆல்டெர்மேனாக இருந்த ம.பொ.சி. தன் தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் கோப்போம் என்ற முழக்கத்துடன் போராட்டத்தைத் தொடங்கினார்.

கடைசியாக 25-3-1953 அன்று தில்லி நாடாளுமன்றத்தில் நேரு, மத்திய அரசின் சார்பில் அதிகாரப்பூர்வமான பிரகடனம் ஒன்றை வெளி யிடுகையில், ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர மாநில எல்லைக்குள்ளேயே இருக்கும் என்று அறிவித் தார்.

தமிழகத்தின் வடக்கெல்லை, தெற்கெல்லை மீட்பில் ம.பொ.சியின் பங்களிப்பை வரலாறு உணர்த்தும். தமிழ்நாடு என்ற பெயர் சூட்டவும் பயிற்சி மொழியாகத தாய்மொழியாம் தமிழ்மொழியே இருக்க வேண்டும் என்றும் அவர் அறப்போர் நடத்தினார். அவர் ஆல்டெர்மேனாக இருந்தபோதுதான் ஆங்கிலேயர் வடிவமைத்திருந்த சென்னை மாநகராட்சியின் கொடியை மாற்றி, சேர,சோழ, பாண்டியரின் வில், புலி, மீன் ஆகியவற்றை பொறித்தார். மாநகராட்சியின் வரவு-செலவு கணக்கதை முதன் முதலாகத் தமிழிலே அவர் தாக்கல் செய்தார்.

## கூடாரம் காலியாகிறது?

ஊதிய உடன்பாட்டை நம்பூதிரி கையெழுத்திட்டதிலிருந்து நூற்றுக்கணக்கான ஊழியர்கள் மாநிலந்தோறும் அந்த சங்கத்திற்கு முழுக்குப்போட்டு வருகின்றனர். சரணாகதி சங்கத்திற்கு இனி சலாம்போட தயாரில்லை என நாடெங்கும் ஊழியர்கள் வெளியேறி வருகின்றனர்.

ஏற்கனவே டில்லியில் 250க்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஆகஸ்ட்டில் BSNLEU விலிருந்து விலகியதால் டில்லித்தலைமையத்தில் அச்சங்கத்திற்கு ஆளே இல்லாமல் போனது. பின்னர் அந்த மாநிலச் சங்கத்தை நம்பூதிரி கலைத்து உத்தரவிட்டது நாமறிந்த செய்திதான். இப்பொழுது பஞ்சாப், ஹரியானா, தமிழ்நாடு, சென்னை தொலைபேசி, மேற்கு வங்கம், கொல்கத்தா தொலைபேசி, மஹராஷ்ட்ரா, பீகார் என பல மாநிலங்களில் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் சரணாகதியை எதிர்த்து வெளியேறி பலநூறுபேர் நமது சங்கத்தில் இணைந்து வருகின்றனர். இது நல்ல துவக்கம். அடுத்த அங்கீகார தேர்தலில் நம்பூதிரி சங்கம் தோற்கப்போவதற்கான அறிகுறி.

## மருத்துவ திட்டத்திற்கான புதிய அடையாள அட்டை

2003 ஆம் ஆண்டில் ஊழியருக்கு வழங்கப்பட்ட மருத்துவ அடையாள அட்டையை புதுப்பிக்கும் பணியை நிர்வாகம் துவங்கியுள்ளது. இதற்காக ஜனவரி மாத சம்பள ரசீதுடன் ஒரு மனு அனைத்து ஊழியருக்கும் வழங்கப்பட்டுள்ளது. உரிய தகவல்களை பூர்த்தி செய்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் (Unit officer) நமது தோழர்கள் தவறாமல் இதனை சமர்ப்பித்திட வேண்டும். பழைய அடையாள அட்டையில் உள்ள விவரங்களை புதுப்பிப்பதற்காகவே இந்த நடவடிக்கை.

Edited and Published by C.K. Mathivanan on behalf of National Federation of Telecom Employees, BSNL - Chennai Telephones from 354, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023 Cell: 9487 621 621 and Printed by G. Durairaj at Pavai Printers (P) Ltd., 17 (142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph: 28482441.

# 4 வது மாநில மாநாடு

**மார்ச் 12,13,14**
**(வெள்ளி, சனி, ஞாயிறு)**

**தர்மபிரகாஷ் திருமண மண்டபம்**
**புரசைவாக்கம்**

| | | |
|---|---|---|
| தலைமை | : | தோழர் **V. ராதாகிருஷ்ணன்**, மாநிலத் தலைவர் |
| மாநாட்டை துவக்கி வைப்பவர் | : | தோழர் **H. மகாதேவன்**, உதவி பொதுச் செயலாளர், AITUC. |
| சிறப்புரை | : | தோழர் **N.T. சஜ்வானி**, சம்மேளன பொதுச்செயலாளர் |
| | : | தோழர் **இஸ்லாம் அகமது**, சம்மேளனச் செயலாளர் |
| | : | தோழர் **S.S. கோபாலகிருஷ்ணன்**, சம்மேளனச் செயலாளர் |
| | | மற்றும் சகோதர சங்கத்தலைவர்கள் |

**கருத்தரங்கம்**

**"நிறுவன மேம்பாட்டில் ஊழியரது பங்கு"**

**பட்டிமன்றம்**

**"ஊதிய உடன்பாட்டால் ஊழியரிடம் விஞ்சி நிற்பது"**

**கோபமே !** **கவலையே !**

**பொது அரங்கம்**

**அரசியல் மற்றும் இயக்க தலைவர்கள் பங்கேற்பர்**

**சார்பாளர் கட்டணம் : ரூ. 300/-**

## பரங்கிமலை கோட்ட மாநாடு (27-01-2010)



# துரோக ஒப்பந்தத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் (19-01-2010)






நிறுவனத்தின் விரிவாக்கத்தை தாமதப்படுத்தும் போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம் (11-01-2010)

